பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
10 11 2024 **SUNDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. ஆராய்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான முதலீடு எதிர்காலத்திற்கானது என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.
2. அனைவருக்குமான வளர்ச்சியை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு உறுதி செய்து வருவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
3. மகாராஷ்ட்ராவில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆட்சி அமைந்தால் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.
4. மலாவி நாட்டில் தட்டம்மை நோய் பரவல் குறித்த எச்சரிக்கையை அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது.
5. போலந்தில் நடைபெற்றுவரும் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Stithapragnya Reddy** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

ஆராய்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான முதலீடு எதிர்காலத்திற்கானது என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற மகாராஜா அக்ரசன் தொழில்நுட்ப கல்வி நிறுவன வெள்ளிவிழா நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பேசினார்.

பொருளாதாரத்திற்கான உந்து சக்தியாக ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு இவ்விரண்டும் திகழ்வதாக அவர் தெரிவித்தார்.

வர்த்தகம், தொழில்துறையை சேர்ந்தவர்கள் அரசின் அழுத்தத்திற்கு ஆளாகக்கூடாது என்று தெரிவித்த அவர், சமூகத்திற்கு அவர்கள் ஆற்றிவரும் பங்களிப்பு அளப்பரியது என்று திரு ஜெக்தீப் தங்கர் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

ஜார்கண்ட் மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் முதல்கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் நாளை நிறைவடைய உள்ள நிலையில், அங்கு அரசியல் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி இன்று கும்லா மற்றும் பொகாரோவில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்று பேசினார்.

அனைவருக்குமான வளர்ச்சியை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு உறுதி செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பிரதமரின் சூரிய மின்சக்தி திட்டத்தின்கீழ், சூரிய மின் தகடுகளை பொருத்துவதற்கு அரசு முதலில் 70 ஆயிரம் ரூபாய் வழங்கும் என்றும், அதன்மூலம், மின்கட்டண செலவு முற்றிலுமாக குறையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், பழங்குடியின மக்களின் நலன்களில் பிஜேபி எப்போதும் கவனம் செலுத்தி வருவதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

கேழ்வரகு உள்ளிட்ட தானிய உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்கள் இருப்பதாகவும் பிரதமர் தமது உரையில் தெரிவித்தார்.

ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் மூத்த தலைவரும், அம்மாநில முதலமைச்சருமான திரு ஹேமந்த் சோரன், ராஞ்சியில் நடைபெற்ற தேர்தல் பேரணியில் பங்கேற்று பேசினார்.

பிஜேபி அரசு மத்திய புலனாய்வு அமைப்புகளை தமக்கு எதிராக பயன்படுத்துவதாக அவர் குற்றம் சாட்டினார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் பேசிய ஜார்கண்ட் மாநில பிஜேபி தலைவர் திரு பாபுலால் மராண்டி, திரு ஹேமந்த் சோரனின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்றும், மத்திய புலனாய்வு அமைப்புகள் தமது கடமையை செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

ஜார்கண்ட் மாநிலத்தில் முதல்கட்டமாக 43 தொகுதிகளில் வரும் புதன்கிழமையன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு வரும் 20-ஆம் தேதியன்று நடைபெறுகிறது.

>>>>><<<<<

மகாராஷ்ட்ராவில் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, அரசியல் கட்சிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா, புல்தானா, மல்காபூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற பேரணிகளில் கலந்துகொண்டு பேசினார்.

தேசியவாத காங்கிரஸ் சரத்பவார் பிரிவு தலைவர் திரு சரத்பவார், இன்று அகமத் நகர், தாராஷிவ் தொகுதிகளில் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

சிவசேனா உத்தவ் தாக்கரே பிரிவு தலைவர் திரு உத்தவ் தாக்கரே இன்று சோலாபூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் பங்கேற்று பேசினார்.

>>>>><<<<<

வாரிசு அரசியலை பிஜேபி ஒருபோதும் அனுமதிக்காது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரிவினைவாத அரசியலுக்கு காங்கிரஸ் முக்கியத்துவம் அளிப்பதாக குற்றம் சாட்டினார்.

வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு பிஜேபி செயல்பட்டு வருவதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

>>>>><<<<<

மகாராஷ்ட்ராவில் வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை பிஜேபி, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி இன்று தனித்தனியே வெளியிட்டன.

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா, மும்பையில் இன்று பிஜேபி தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்.

பெண்களுக்கான மாதாந்திர நிதியுதவியை ஆயிரத்து 500 ரூபாயிலிருந்து, 2 ஆயிரத்து 100-ஆக உயர்த்துவது,

பத்து லட்சம் மாணவர்களுக்கு, தலா 10 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை,

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்தும் வகையில், மின் கட்டணத்தில் 30 சதவீதம் குறைப்பு, உள்ளிட்ட அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

அடுத்த ஐந்தாண்டுகளில் ஒரு கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவது,

வறட்சியான பகுதிகளுக்கு பருவகால மழை நீரை திருப்பி விடுவது உள்ளிட்ட உத்தரவாதங்கள் பிஜேபி தேர்தல் அறிக்கையில் உள்ளன.

இதனிடையே, காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியின் தேர்தல் அறிக்கையை காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே இன்று மும்பையில் வெளியிட்டார்.

அப்போது பேசிய அவர், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆட்சி அமைந்ததால் மகாராஷ்ட்ராவில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று தெரிவித்தார்.

பெண்களுக்கு மாதந்தோறும் 3 ஆயிரம் ரூபாய் நிதியுதவி, படித்த வேலைவாய்ப்பற்ற இளையோருக்கு மாதந்தோறும் 4 ஆயிரம் ரூபாய் வரை நிதியுதவி, விவசாயிகளுக்கு 3 லட்சம் ரூபாய் வரை கடன் தள்ளுபடி, மாநில அரசு பணியிடங்களை நிரப்புவதன் மூலமாக இரண்டு லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

>>>>><<<<<

மலாவி நாட்டில் தட்டம்மை நோய் பரவல் குறித்த எச்சரிக்கையை அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது.

கடந்த அக்டோபர் முதல் அந்நாட்டின் தலைநகரான லிலாங்வேயில் 20-க்கும் மேற்பட்ட பகுதிகளில் தட்டம்மை பரவல் கண்டறியப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோய் பரவலை தடுக்கும் வகையில் பள்ளி வளாகங்களில் சுகாதார கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், தட்டம்மை நோய் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக சுகாதாரத்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியாவை சேர்ந்த ஒரு சிறுவனுக்கு பறவைக்காய்ச்சல் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

குழந்தைகள் மருத்துவமனையில் அந்த சிறுவனுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், அவரது உடல்நிலையை சுகாதார நிபுணர்கள் தீவிரமாக கண்காணித்து வருவதாகவும், அம்மாகாண சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

சிறுவனுக்கு நோய் தொற்று ஏற்பட்டது எப்படி என்பது குறித்த விசாரணை தீவிரப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் அது கூறியுள்ளது.

>>>>><<<<<

மூன்று நாள் பயணமாக இன்று கொழும்பு சென்றடைந்த, இந்திய கடற்படையின் நீர்மூழ்கி கப்பல் ஐ என் எஸ் வேலாவுக்கு இலங்கை கடற்படை சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த பயணத்தையொட்டி, இலங்கை கடற்படை மற்றும் இந்திய நீர்மூழ்கி கப்பலை சேர்ந்த கடற்படை வீரர்கள் இடையே திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் நடைபெறுகின்றன.

இருநாடுகளுக்கு இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில், இந்த பயணம் அமைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹாவை, ஜம்மு காஷ்மீர் சீக்கிய ஒருங்கிணைப்புக்குழு பிரதிநிதிகள் இன்று நேரில் சந்தித்து பேசினர்.

பஞ்சாபி மொழியை ஊக்குவிப்பது, மகாராஜா ரஞ்சித் சிங் சிலையை ஸ்ரீநகரில் அமைப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை அக்குழுவினர் திரு மனோஜ் சின்ஹாவிடம் தெரிவித்தனர்.

>>>>><<<<<

உத்தரப்பிரதேச மாநிலம் கிரேட்டர் நொய்டா விரைவுச்சாலையில், இன்று நேரிட்ட விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த இரண்டு பெண்கள் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர்.

நான்கு சக்கர வாகனம் ஒன்று, நின்று கொண்டிருந்த கனரக வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இவ்விபத்து குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

**>>>>><<<<<**

அகில இந்திய காவல்துறையினர் தடகள சாம்பியன் போட்டி புதுதில்லியில் இன்று தொடங்கியது.

ஐந்து நாட்கள் நடைபெறும் இப்போட்டியில், 25 மாநிலங்கள், நான்கு யூனியன் பிரதேசங்கள், பத்து மத்திய ஆயுத காவல்படைகளை சேர்ந்த சுமார் ஆயிரத்து 100 பேர் பங்கேற்றுள்ளனர்.

காவல்துறையினரின் உடல் தகுதி மற்றும் விளையாட்டுத்திறனை மேம்படுத்தும் வகையில், இப்போட்டி நடத்தப்படுகிறது.

**>>>>><<<<<**

போலந்தில் நடைபெற்றுவரும் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Stithapragnya Reddy** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.
ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-9, 22-10 என்ற செட் கணக்கில், சைப்ரசின் **Nikolas Kokosis** –ஐ வென்றார்.
மற்றொரு ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் ஐக்கிய அரபு எமிரேட்டின் **Nisarg Thunga** காயம் காரணமாக போட்டியிலிருந்து பாதியிலேயே வெளியேறியதை அடுத்து இந்தியாவின் **Deepanshu** வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

**>>>>><<<<<**

இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான இரண்டாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.
**Gqueberha**-வில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற தென்னாப்பிரிக்கா முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

**>>>>>END<<<<<**